கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை 2020

**General Certicate of Education (Adv. Level) Examination, 2020**

பகுதி - **II**

- **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் **புதியதொரு தாளில்** ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

1. வரையறுத்த கொவின்- 19 பொதுக் கம்பனியின் 31.03.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | **வரவு (ரூ.'000)** | **செலவு (ரூ.'000)** |
|---|---|---|
| நிலமும் கட்டிடமும் (கிரயத்தில்) | 4 200 | |
| தளபாடங்களும் பொருத்துக்களும் (கிரயத்தில்) | 4 000 | |
| 01.04.2011 இல் திரண்ட பெறுமானத்தேய்வு - தளபாடங்களும் பொருத்துக்களும் | | 400 |
| 01.04.2011 இல் திரண்ட பெறுமானத்தேய்வு – கட்டிடம் | | 500 |
| வியாபார வருமதிகள் | 400 | |
| 01.04.2019 இல் எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள் | | 50 |
| 01.04.2019 இல் சரக்கிருப்பு (கிரயத்தில்) | 500 | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 150 | |
| விற்பனைகள் | | 4 800 |
| கொள்வனவுகள் | 1 500 | |
| விநியோக செலவுகள் | 550 | |
| நிர்வாக செலவுகள | 600 | |
| நிதி செலவுகள | 100 | |
| ஆண்டு காலத்தில் செலுத்திய வருமானவரி | 60 | |
| 01.04.2019 இல் விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | | 48 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 1162 |
| செலுத்திய இடைக்கால பங்குலாபம் | 100 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (400 000 பங்குகள்) | | 4 000 |
| 01.04.2019 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள் | | 1 200 |
| | **9 750** | **9 750** |

**மேலதிக தகவல்ள்:**

- 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தின் மாற்றம் பின்வருமாறு:

| | **ரூபா.'000** |
|---|---|
| 01.04.2019 இல் மீதி | 3 000 |
| வருட காலத்தினுள் வழங்கிய 100 000 பங்குகளின் பெறுமதி | 1 000 |
| 31.03.2020 இல் மீதி | 4 000 |

- 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முன்னர் பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.
- உயர்தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் நிலமானது 31.03.2020 இல் ரூபா 2 500 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- கட்டிடங்களின் கிரயம் ரூபா 2 000 000 ஆகும். இவற்றிற்கு மீள்மதிப்பீட்டு பெறுமானத்தில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- உயர்தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் கட்டிடமானது முதல் தடவையாக 01.04.2019 இல் ரூபா 1 000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- தளபாடங்களும் பொருத்துக்களும் நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

- ❖ வருட இறுதியில் காணப்படும் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்கிற்கான படிகள் 10% செய்வது கம்பனியின் கொள்கையாகும்.
- ❖ 31.03.2020 இல் சரக்கிருப்புக்களின் கிரயம் ரூபா 500 000 ஆகும். இத்திகதியில் சரக்குகளின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 450 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ கம்பனியானது விற்பனை உத்தரவாதத்துடன் பொருட்களை விற்பனை செய்கிறது. இந்த உத்தர வாதத்திற்காக வருடாந்த தேறிய விற்பனையில் **வருடாந்தம்** 2% ஏற்பாடு செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
- ❖ கம்பனியானது பொருட்களை விநியோகிப்பதற்காகப் பயன்படுத்துவதற்கு நிதிக் குத்தகையின் கீழ் 01.04.2019 இல் வாகனமொன்றை வாங்கியது. இத்திகதியில் இவ் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூபா 2 500 000 ஆக இருந்ததுடன் அது ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதிக்குச் சமமாக இருந்தது. பின்வரும் தகவல்களும் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

  | | |
  |---|---|
  | குத்தகைக் காலம் | - 5 வருடங்கள் |
  | வாகனத்தின் பயன்தரு வாழ்வுக்காலம் | - 5 வருடங்கள் |

  வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம்(வருட இறுதியில் செலுத்த வேண்டியது) ரூபா 600 000 (இவற்றுள் ரூபா 100 000 வட்டியாகும்).

  31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் குத்தகைக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய குத்தகைத் தவணைக் கட்டணம் ஆனது வியாபாரக் கொடுக்குமதிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

  மோட்டார் வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடாந்தம் 20% பெறுமானத்தேய்விடுவது கம்பனியின் கொள்கையாக உள்ளது.
- ❖ கம்பனியானது தனது எல்லா நடைமுறையல்லாச் சொத்துக்களையும் 01.04.2019 இல் காப்புறுதி செய்துள்ளதுடன் 30.09.2020 இல் முடிவடையும் காலத்திற்கான காப்புறுதிக் கட்டணம் ரூபா 150 000 செலுத்தியுள்ளது. செலுத்திய இக்காப்புறுதியானது நிர்வாகச் செலவுகளுள் உள்ளடங்கியுள்ளது.
- ❖ 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான வரியானது வரிக்கு முந்திய இலாபத்தின் 1/4 என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ இயக்குனர்சபை இவ்வருடத்திற்கான இறுதிப் பங்குலாபமாக ரூபா 100 000 இனைப் பிரேரித்துள்ளது.
- ❖ நிறுத்திவைத்த வருவாய்களிலிருந்து ரூபா 500 000 இனை மாற்றுவதன் மூலம் வருட இறுதியில் பொது ஒதுக்கத்தினை உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

கொவின் பொதுக் கம்பனிக்கான பின்வரும் நிதிக் கூற்றுக்களைப் பிரசுரிக்கும் நோக்கத்துக்காக (குறிப்புகள் உட்பட) தயாரிக்குக.

1) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் எனைய முற்று மடங்கிய வருமானக் கூற்று.
2) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று.
3) 31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

(மொத்த புள்ளி – 40)

2. அ. அரவிந் நிறுவனம் விசேட வகையான ஆடையினை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனத்தின் தகவல்கள் ஆகும். நடைமுறையாண்டில் இந்நிறுவனம் 25000 ஆடையினை விற்பனை செய்ய எதிர்பார்க்கின்றது. ஒரு ஆடையின் விற்பனை விலை ரூ 900 ஆகும். ஒரு ஆடையின் உற்பத்தி கிரயம் ரூ 400

எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த நிலையான கிரயம்.

| | |
|---|---|
| வடிவமைப்பாளர் சம்பளம் | 2500 000 |
| விளம்பரம் | 1000 000 |
| ஏனைய நிலையான கிரயம் | 1500 000 |
| | **5000 000** |

**வேண்டப்படுவது,**

1) சமப்பாட்டுப் புள்ளியினை ஆடைகளின் எண்ணிக்கையிலும், பெறுமதியிலும் காண்க.
2) பாதுகாப்பு எல்லை அலகுகளிலும், பெறுமதியிலும்.
3) எதிர்பார்க்கப்படும இலாபம்.
4) விற்பனைத் தரகாக ஆடை ஒன்றுக்கு ரூ50 அறிமுகப்படுத்தப்பட்டால் ரூபா 4000 000 வருடாந்த இலாபம் ஈட்ட எவ்வளவு ஆடைகளை விற்பனை செய்ய வேண்டும்?
5) மேலதிக விளம்பரச் செலவு ரூ 2630 000 ஏற்படுமெனவும் விற்பனை விலை இவ்வாண்டில் 5% அதிகரிக்கும் எனக் கொண்டு சமப்பாட்டு புள்ளியில் ஆடைகளின் எண்ணிக்கை.

ஆ. பின்வருவது சில்வா கம்பனியொன்றின் பூரணப்படுத்தப்படாத பாதீடு செய்யப்பட்ட மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை ஆகும்.

| மேந்தலைகள் | பகிர்தலுக்கான அடிப்படை | ஒன்றிணைத்தல் பகுதி (ரூ.'000) | முடிவுறுத்தும் பகுதி (ரூ.'000) | களஞ்சிய பகுதி (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கப்பட்ட மேந்தலைகள் | | 800 | 386 | 290 | 1 476 |
| தொழிற்சாலைமின்சாரம் | | | | | 360 |
| வாடகை | | | | | 180 |
| இயந்திரப் பெறுமானத்தேய்வு | | | | | 300 |
| ஊழியர் மேற்பாாவை செலவுகள் | | | | | 300 |

**மேலதிக தகவல்கள் :**

1)

| விபரம் | ஒன்றிணைத்தல் பகுதி | முடிவுறுத்தும் பகுதி | களஞ்சிய பகுதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| கிலோவாற் மணித்தியாலங்ககள் | 15 000 | 6 000 | 3 000 | 24 000 |
| இயந்திரத்தின் கிரயம் (ரூ.) | 1 000 000 | 500 000 | - | 1 500 000 |
| தளப்பரப்பு (சதுர மீற்றர்கள்) | 200 | 100 | 60 | 360 |
| ஊழியர் எண்ணிக்கை | 25 | 100 | 25 | 150 |

2) களஞ்சிய பகுதியானது தனது 60% சேவைகளை ஒன்றிணைத்தல் பகுதிக்கும் மிகுதியை முடிவுறுத்தல் பகுதிக்கும் வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
3) ஒன்றிணைத்தல் பகுதி, முடிவுறுத்தல் பகுதி என்பவற்றின் மேந்தலைகள் முறையே இயந்திர மணித்தியாலங்கள், நேர் ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றது.
4) பின்வருவன கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு வகையான உற்பத்திப்பொருட்கள் தொடர்பானதாகும்.

| விபரம் | T சேட் | சேட் |
|---|---|---|
| அலகொன்றிக்கான முதன்மைக் கிரயம் (ரூ.) | 800 | 820 |
| அலகொன்றிக்கு தேவைப்படும் மணித்தியாலங்கள் (பாதிடப்பட்டது) | | |
| - இயந்திர மணித்தியாலங்கள் | 5 | 6 |
| - நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 4 | 8 |
| உறபத்தி அலகுகள் (பாதிடப்பட்டது) | 1 000 | 1 500 |

**வேண்டப்படுவது :**

1) பூரணப்படுத்தப்பட்ட மேந்தலை பகுப்பாய்வு அட்டவணை (களஞ்சிய பகுதியின் மேந்தலைக் கிரயத்தின் மீள் பகிர்வு உட்பட)
2) ஒவ்வொரு உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்
3) Tசேட், சேட் உற்பத்திப்பொருட்களின் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம்.

(மொத்த புள்ளி – 40)

3. அ. அமுதன் PLC நிறவனத்தின் நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

**அமுதன் PLC நிறவனத்தின்**
**31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று**

| | ரூபா '000 | ரூபா '000 |
|---|---|---|
| விற்பனைகள் | | 7 500 |
| விற்பனைக் கிரயம் | | (4 500) |
| மொத்த இலாபம் | | 3 000 |
| காணி விற்பனையிலிருந்தான இலாபம் | | 300 |
| பெறுமானத்தேய்வு - கட்டடம் | 500 | |
| - அலுவலக உபகரணம் | 800 | |
| ஏனைய செலவுகள் | 1 000 | (2 300) |
| வரிக்கு முந்திய இலாபம் | | 1 000 |
| வருமான வரி | | (300) |
| ஆண்டிற்கான இலாபம் | | **700** |

**அமுதன் PLC நிறவனத்தின்**
**31 மார்ச்சில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று**

| | 2020 (ரூ,'000) | 2019 (ரூ,'000) |
|---|---|---|
| காணி | 5 000 | 9 000 |
| கட்டடம் - கிரயத்தில் | 10 000 | 10 000 |
| திரண்ட பெறுமானத்தேய்வு - கட்டடம் | (5 000) | (4 500) |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 8 000 | 4 000 |
| திரண்ட பெறுமானத்தேய்வு - அலுவலக உபகரணம் | (2 400) | (1 600) |
| சரக்கிருப்பு | 1 400 | 1 000 |
| வியாபாரக் வருமதிகள் | 1500 | 1 200 |
| வங்கியிலுள்ள காசு | 1 500 | 500 |
| | **20 000** | **19 600** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 14 000 | 13 000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 4 200 | 4 000 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 1 500 | 2 000 |
| செலுத்த வேண்டிய வருமானவரி | 300 | 600 |
| | **20 000** | **19 600** |

**மேலதிக தகவல்கள் :**

(1) சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
(2) 01.04.2019 இல் கம்பனியானது 10 000 பங்குகளை ரூபா 1 000 000 இற்கு வழங்கியுள்ளது.
(3) காணியின் ஒரு பகுதியானது ரூபா 4 300 000 காசுக்கு விற்கப்பட்டது.
(4) 31.03.2020 இல் ரூபா 4 000 000 இற்கு அலுவலக உபகரணகள் காசுக்கு வாங்கப்பட்டது.
(5) இவ்வாண்டில் இடைக்காலப் பங்கிலாபமாக ரூபா 500 000 செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது :**

பொருத்தமான இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு அமைய 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அமுதன் PLC நிறுவனத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று.

ஆ. வரையறுத்த அமல் பொதுக் கமபனியினதும், வரையறுத்த விமல் பொதுக் கம்பனியினதும் 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்களின் சுருக்கங்கள் கீழே தரப்படுகின்றது.

| விபரம் | அமல் கம்பனி (ரூ. '000) | விமல் கம்பனி (ரூ. '000) |
|---|---|---|
| விற்பனைகள் | 6 000 | 7 500 |
| விற்பனைக் கிரயம் | (4 000) | (5 800) |
| மொத்த இலாபம் | 2 000 | 1 700 |
| செலவுகள் | (1 100) | (800) |
| வரிக்கு முந்திய இலாபம் | 900 | 900 |
| வருமான வரி | (300) | (300) |
| ஆண்டிற்கான இலாபம் | **600** | **600** |

31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்களும் கிடைக்கப்பெற்றன.

| விபரம் | அமல் கம்பனி (ரூ. '000) | விமல் கம்பனி (ரூ. '000) |
|---|---|---|
| சராசரி சரக்கிருப்பு | 1 600 | 2 900 |
| சராசரி வியாபாரக் கடன்பட்டோர் | 2 400 | 2 500 |
| 31.03.2013 இல் உரிமையாண்மை | 3 000 | 2 400 |
| 31.03.2013 இல் நீண்டகாலக் கடன்கள் | 3 600 | 1 800 |
| செலவுகளில் உள்ளடங்கியுள்ள கடன் வட்டி | 300 | 200 |

**வேண்டப்படுவது :**

1) இரண்டு கம்பனிகளுக்குமான பின்வரும் விகிதங்கள்:
   (1) உரிமையாண்மை மீதான விளைவு
   (2) வட்டிக் காப்பு
   (3) சரக்கிருப்புப் புரள்வு
   (4) கடன்பட்டோர் புரள்வு (சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் இடம்பெறும்)
   (5) கடன்-உரிமையாண்மை

2) மேலே 1) இலுள்ள கணிப்பீடுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் காரணங்களுடன் குறிப்பிடுக.
   (1) உரிமையாளர்களுக்கு உயர்வான திரும்பலை வழங்கும் கம்பனி
   (2) ஆகக் கூடுதலான கடன் மூலதனத்தை பயன்படுத்தும் கம்பனி
   (3) கடன்பட்டோரிடமிருந்து பணத்தைச் சேகரிப்பதற்காக நீண்ட காலத்தை எடுக்கும் கம்பனி
   (4) குறுகிய காலப்பகுதியில் சரக்கிருப்புக்களை விற்பனை செய்யும் கம்பனி
   (5) கடனிற்கான வட்டியை செலுத்துவதற்கு உயர்வான இயலுமையைக் கொண்டுள்ள கம்பனி.

(மொத்த புள்ளி – 40)

4. அ. ஆதவன்,மாதவன்,அகிலன் ஆகியோர் கம்பனியொன்றின் மூன்று ஊழியர்கள். இவர்களின் சம்பளம் தொடர்பான பின்வரும் தகவல்கள் 2020 மார்ச் மாதத்திற்காக தரப்பட்டுள்ளது.

❖ வேலை செய்த மணித்தியாலங்கள்- மாதத்திற்கு

| ஊழியன் | வார நாட்கள் | வார இறுதி நாட்கள் |
|---|---|---|
| ஆதவன் | 160 | - |
| மாதவன் | 160 | 40 |
| அகிலன் | 160 | 80 |

❖ மணித்தியால வீதங்கள்:
- வார நாட்களுக்கான வீதம் - மணித்தியாலத்திற்கு ரூபா 200 வீதம்
- வார இறுதி நாட்களுக்கான மேலதிக நேரவீதம் - வாரநாட்களின் வீதத்தின் 150%

❖ வேலை கொள்வோர், ஊழியர் என்போரால் ஊழியர் சேமலாப நிதிப் (EPF) பங்களிப்பு முறையே 15%, 10% ஆகும்.
வேலை கொள்வோரால் ஊழியர் நம்பிக்கை நிதிப் (ETF) பங்களிப்பு 3% ஆகும்.
EPF , ETF என்பவற்றைக் கணிப்பிடுவதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் உரித்துடையவையல்ல.

❖ கழிப்பனவுகள்:
- நலன்புரிச் சங்கத்திற்கு ஊழியர்களின் மாதாந்தப் பங்களிப்பு - ரூபா 200(ஊழியன் ஒருவனுக்கு)
- அகிலனின் மாதாந்த கடன் தவணைக் கொடுப்பனவு - ரூபா 4 000

**வேண்டப்படுவது:**
1) 2020 மார்ச் மாதத்திற்கான சம்பளப் பட்டியல்
2) 2020 மார்ச் மாதத்திற்கான சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு, செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி (EPF) கணக்கு, ஊழியர் நம்பிக்கை நிதிக் (ETF) கணக்கு.
3) 2020 மார்ச் மாதத்திற்கான ஊழியர்கள் தொடர்பான மொத்தச் செலவுகள்

ஆ. பழங்களை சேகரிப்புப் பெட்டிகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று விசேட வகையான மூலப்பொருளை இவ்வுற்பத்தயில் பயன்படுத்துகிறது. சேகரிப்புப் பெட்டியொன்றை உற்பத்தி செய்வதற்கு இம்மூலப்பொருளின் 4 கிலோகிராம் தேவைப்படுகிறது.
இதன் மாதாந்த உற்பத்தியானது 150 இலிருந்து 200 பெட்டிகளாகும்.
இம்மூலப்பொருளின் மீள்கட்டளைத் தொகை 4000 கிலோகிராம் ஆகும்.
கட்டளையொன்றிற்கான விநியோகக் காலம் 5 தொடக்கம் 7 வேலைசெய்யும் நாட்களாகும்.

**வேண்டப்படுவது:**
இம் மூலப்பொருள் தொடர்பில்:
(1) மீள் கட்டளை மட்டம்
(2) ஆகக் குறைந்த இருப்புமட்டம்
(3) ஆகக்கூடிய இருப்பு மட்டம்.
(4) சராசரி இருப்பு மட்டம்.

(மொத்த புள்ளி – 40)

5. அ. பாரதி உற்பத்திக் கம்பனி தனது செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்றை பதிலீடு செய்ய எண்ணியுள்ளது. புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல்கள் இந்த இரண்டு இயந்திரங்களுடனும் தொடர்பானவை.

| விபரம் | புதிய இயந்திரம் (ரூ.'000) | தற்போதைய இயந்திரம்(ரூ.'000) |
|---|---|---|
| கிரயம் ................................ | 1 000 | - |
| தற்போதைய சந்தை பெறுமதி ....... | - | 300 |
| எஞ்சிய பெறுமதி ...................... | 200 | - |
| வருடாந்த செயற்பாட்டுக் கிரயம் : | | |

| | | |
|---|---|---|
| வருடம் 1 .......................... | 100 | 300 |
| வருடம் 2 .......................... | 100 | 300 |
| வருடம் 3 ......................... | 120 | 320 |
| வருடம் 4 .......................... | 120 | 320 |
| வருடம் 5 .......................... | 140 | 360 |

புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் மேலதிக தொழிற்படு மூலதனமாக ரூ.280 000 ஆனது இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தேவைப்படும். இத் தொகையானது செயற்றிட்ட முடிவில் மீள பெற்றுக்கொள்ளப்படும். செயற்றிட்டத்தின் தேவைப்படும் திரும்பல் வீதம் 10% ஆகும். 10% ல் கழிவீட்டுக் காரணி (முதல் 2 தசம தானத்தில்) வருமாறு :

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது :**

(1) செயற்றிட்டத்தின் காசு வெளிப்பாய்ச்சல்களையும் உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கிய அட்டவணையொன்று.
(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி.
(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் செயற்றிட்டத்தை தெரிவு செய்வதற்கான சிபாரிசு.

ஆ. பின்வரும் தகவல்கள் கோட்டா கம்பனியின் உற்பத்திப்பொருள் P உடன் தொடர்பானவை

| | |
|---|---|
| சிக்கனக்கட்டளைத் தொகை (EOQ) | 200 அலகுகள் |
| வருடாந்தக்கேள்வி | 8000 அலகுகள் |
| கட்டளைக்கிரயம் | கட்டளை ஒன்றிற்கு 250 ரூபா |
| இருப்பு வைத்திருத்தல் கிரயம் | அலகொன்றிற்கு 100 ரூபா |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக
(1). மொத்த கட்டளைக்கிரயம்.
(2). மொத்த இருப்பு வைத்திருத்தற் கிரயம்

இ. அநுரா கம்பனி சரக்கிருப்பு வழங்கலை விலையிடுவதற்கு நிறையளித்த சராசரி முறையைப் பயன்படுத்துகிறது. 2020 மார்ச் மாதத்திற்கான சரக்கிருப்பின் உருப்படியொன்று தொடர்பான தகவல்கள் வருமாறு:

| திகதி | விபரம் | அளவு(அலகுகள்) | விலை(ரூ.) |
|---|---|---|---|
| 01.03.2020 | மீதி | 1 000 | 10 |
| 07.03.2020 | கொள்வனவுகள் | 2 000 | 15 |
| 14.03.2020 | கொள்வனவுகள் | 4 000 | 11 |
| 20.03.2020 | விற்பனைகள் | 4 000 | ? |

பின்வருவனவற்றைக் கணிக்குக:
(1) 2020 மார்ச் மாதத்திற்கான விற்பனை கிரயம் ரூ. ............................
(2) 31.03.2020 இலுள்ளவாறான சரக்கிருப்பு ரூ. ..................................

(மொத்த புள்ளி – 40)

6. அ. சேரன் உற்பத்தி நிறுவனம் இயந்திரமொன்றினை இறக்குமதி செய்வதற்கு கீழ் வரும் கிரய உருப்படிகள் வருமாறு(VAT தொடர்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்)

| | "ரூபா 000" |
|---|---|
| இயந்திரத்தின் குறித்த விலை (10% வியாபார கழிவுக்கு முன்) | 1000 |
| இறக்குமதி தீர்வை வரி | 200 |
| தீர்வைக் கட்டணம் | 20 |
| துறைமுகத்திலிருந்து கொண்டுவரல் செலவு | 10 |
| இறக்குமதி கூலி | 5 |
| பொருத்துதல் ஒன்றுசேர்த்தல் கிரயம் | 35 |
| பொறியியல் மற்றும் தொழில்சார் கட்டணம் | 10 |
| முதற்கட்ட பரீட்சாத்த உற்பத்திக் கிரயம் | 8 |
| இயந்திரத்திற்கான பெறுமதிசேர்வரி | 90 |
| மீளப்பொருத்துவதற்கு ஏற்பட்ட கிரயம் | 10 |
| இயந்திரத்திரப் பராமரிப்பு கிரயம் | 12 |

**வேண்டப்படுவது:**

LKAS – 16 இன் முதற்தடவையாக இனங்காணவேண்டிய இயந்திரக்கிரயம் எவ்வளவு?

ஆ. வரையறுக்கப்பட்ட சுமதி பொதுக்கம்பனி 01.04.2019 இல் குத்தகையின் கீழ் பொறி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு கீழ்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்

| | |
|---|---|
| மோட்டடார் வாகனத்தின் நியாயமான பெறுமதி | ரூபா 3200 000 |
| குத்தகைக்காலம் | 5 வருடங்கள் |
| ஆரம்பக் கொடுப்பனவு இல்லை | |
| தவணைக் கட்டணம் | ரூபா 606800 |
| வட்டி வீதம் 10% ஆகும். | |
| மோட்டார் வாகன ஆயள்காலம் | 5 வருடங்கள் |
| இழிவுப் பெறுமதி | ரூபா 300 000 |

**வேண்டப்படுவது:-**

31.03.2020 இல் முடிவடைந்த காலத்திற்கான
1. குத்தகைக் கடன்கொடுத்தோர் கணக்கு
2. குத்தகைக் கடன்கொடுத்தோர் நிதிநிலைமைக் கூற்றில் காட்டும் விதம்

இ. வரையறுக்கப்பட்ட வேந்தன் பொதுக்கம்பனியின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இயந்திரம் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| **இயந்திர வகை** | **கொள்வனவு திகதி** | **கிரயம் (ரூ000)** | **எஞ்சிய பெறுமதி (ரூ000)** | **பயன்தரு ஆயட் காலம் (வருடம்)** |
|---|---|---|---|---|
| 01. | 01.10.2016 | 800 | 200 | 5 |
| 02. | 01.04.2017 | 1600 | 100 | 6 |
| 03. | 01.07.2019 | 1400 | 200 | 6 |

**மேலதிக தகவல்கள்**

1. எல்லா இயந்திரங்களும் அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பாவனைக்கு தயாரான நிலையில் உள்ளதுடன் அவை கிரயத்தில் வருடாந்தம் நேர்கோட்டு முறையின் கீழ் பெறுமானத்தேய்விடப்படுகின்றன.

2. இயந்திர வகை 01 ஆனது 01.10.2019 இல் ரூ 550 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

3. இயந்திர வகை 02 இன் பயன்தரு ஆயள் காலம் 01.04.2019 இல் 6 வருடங்களில் இருந்து 10 வருடங்களாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் இதன் எஞ்சிய பெறுமதியில் எதுவித மாற்றமும் இல்லை.

**வேண்டப்படுவது**

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் கணக்குகள்:

1. இயந்திரம்
2. திரண்ட பெறுமானத் தேய்வு - இயந்திரம்
3. இயந்திரம் அகற்றுதல்

(மொத்த புள்ளி – 40)